யாழ். வலயக் கல்வித் திணைக்களத்தின் அனுசரணையுடன்
தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

# Field Work Centre

FWC

## தவணைப் பரீட்சை, யூன்- 2015
## Term Examination, June - 2015

| தரம் :- 13 (2015) | புள்ளித்திட்டம் | இந்து சமயம் |
|---|---|---|

### இந்துசமயம் - I

| | | | | |
|---|---|---|---|---|
| 01) 2 | 11) 1 | 21) 1 | 31) 5 | 41) 1 |
| 02) 1 | 12) 2 | 22) 2 | 32) 4 | 42) 3 |
| 03) 3 | 13) 3 | 23) 2 | 33) 2 | 43) 5 |
| 04) 2 | 14) 4 | 24) 3 | 34) 3 | 44) 1 |
| 05) 5 | 15) 5 | 25) 1 | 35) 1 | 45) 2 |
| 06) 2 | 16) 3 | 26) 5 | 36) 4 | 46) 4 |
| 07) 5 | 17) 3 | 27) 4 | 37) 5 | 47) 3 |
| 08) 5 | 18) 2 | 28) 2 | 38) 2 | 48) 4 |
| 09) 3 | 19) 2 | 29) 3 | 39) 4 | 49) 5 |
| 10) 4 | 20) 4 | 30) 1 | 40) 3 | 50) 1 |

(50 x 2 = 100 புள்ளிகள்)

### இந்துசமயம் - I
### பகுதி - I

01) அ) இயற்கை சார்ந்த தெய்வங்களின் வழிபாடு விண்ணுலகம், இடையுலகஞ் சார்ந்த தெய்வங்கள் பற்றிய தெய்வீகச் சிந்தனைகள் கடவுள் கோட்பாட்டிற்கு அடிப்படையான கடவுள் நம்பிக்கை யாகம் உபாசனை முறைகள் வேட்டல் அக்கினி மந்திரங்களை உச்சரித்தல் பல நாமங்களைக் கூறி வழிபடுதல் செல்வம் நீண்ட ஆயுள் மக்கள் பேறு சாம வேதங்களில் இசையுடன் கூடிய உபாசனை முறைகள்

ஆ) முதலாம் பத்தாம் மண்டலங்களில் கூறப்பட்டுள்ள தத்துவக் கருத்துக்கள் 'ஏகம்சத் விப்ராபகுதத் வதந்தி' பிரஜாபதி, விஷ்வகர்மன், விஸ்வதேவ என்றும் கொள்கை பிற்கால பிரமம் பற்றிய சிந்தனைக்கு அடிப்படை. ரிதக் கோட்பாடு பிரபஞ்ச உற்பத்தி நாஸதீயகத்த விளக்கம் பத்தாம் மண்டல விளக்கம் - எங்கள் ஆகுதிப் பொருளையாருக்கு இடுவோம் என ஏக்கம் மீதூரக் கேட்டல்.

இ) பிரமச்சரிய சூக்தம் வாழ்க்கைப் படிநிலை பற்றிய சிந்தனைக்கு எடுத்துக்காட்டு. குடும்பத் தலைவன் முக்கிய கடமைகளில் ஒன்று வேள்விச் சடங்கை ஒழுங்காக மேற்கொள்ளல்.
சமூகக் கட்டமைப்பு - சமிதி - சபா - ஒழுங்கு போன்ற விடயங்கள் விளக்கப்பட வேண்டும்.
பொழுது போக்குகள் (7 + 7 + 6 = 20 புள்ளிகள்)

02) அ) கால அடிப்படையில் விளக்கம் - கணபதியின் தோற்றம் சண்மதங்களில் ஒன்று வேதங்களில் கணபதி பற்றிய குறிப்புக்கள் கணபதியை முழுமுதல் கட்வுளாகக் கொண்டு வழிபடும் இறை வேதங்களில் கவிஞர்களில் கவிஞன் ஞானிகளில் ஞானி - பல்லவர் காலத்தில் வாதாபி கணபதி வழிபாடு - சோழர் காலத்தில் நம்பியாண்டார் நம்பியின் கணபதி வழிபாடு விளக்கப்படவேண்டும்.

ஆ) திருவுருவங்கள் ஆசனநிலை, நிற்கும் நிலை நடனமாடும் நிலைகளில் உள்ளன. பஞ்சதான அளவுப் பிரமாணம். பிரணவத்தின் வடிவை வெளிப்படுத்தும் யானைமுகம் விஷ்ணு ரூபம் கண்கள் சிவரூபம் வலப்பாகம் சூரிய ரூபம் கடப்பாகம் சக்தி ரூபம் நாபி - பிரம்ம ரூபம். அனைத்து ஜீவராசிகளும் இவரது உடலில் இணைந்திருத்தல் என்ற நம்பிக்கை - திருவுருவம் உணர்த்தும் தத்துவம் பற்றி விரிவாக விளக்கப்படவேண்டும்.

இ) ஆலயங்களிலும் வீடுகளிலும் நடைபெறும் கிரியைகளில் முதன்மையான இடம்
மஞ்சள் மா, அரிசி மா சாணம் முதலியவற்றால் உருவம் அமைத்து வழிபடும் மரபு - அறுகம் புல் சிறப்பாக இடம்பெறல்
காயத்திரி மந்திரத்துடன் கூடிய ஹோமம் ஆலயங்களில் இடம்பெறும் - ஆகமமுறை சார்ந்த முறை சாராத வழிபாட்டு முறைகள் விளக்கப்படவேண்டும்.

(7 + 6 + 7 = 20 புள்ளிகள்)

03) அ) சமண, பௌத்தம் வருகை, பல்லவர் ஆட்சி, வடமொழி மரபுகள் தமிழ் மொழியுடன் கலந்தது.
புராண, இதிகாச மரபு போதிக்கப்பட்டமை
அரசர்கள் வழங்கிய ஆதரவு
தொண்டர்கள் குலம் தொழுகுலம்

ஆ) நால்வரும் ஆற்றிய பணிகள், பதிகங்கள் மூலம் தெயிவீக அனுபவங்களை வெளியிட்டனர். ஆலய விழிபாடு, ஆலய சேவைகள், பண் கலந்த பாடல்கள், நாயன்மார்களது அற்புத செயல்கள், மக்களுடன் தொடர்புபட்டு பணியாற்றினார்கள். தத்துவக் கருத்துக்களை பாடல்கள் மூலம் வெளியிட்டனர்.

இ) பலவகையான ஆலய அமைப்புக்கள், பக்தி வெளிப்பாட்டுக்கும், இறை வழிபாட்டிற்கும் உரிய இடமாகியது. சைவசாதனங்களுக்குரிய இடம் ஆலயம், ஆகம முறையான வழிபாடுகள், சிற்பம், ஓவியம், நடனம், இசைக்கலை வளர்ச்சிக்குரிய இடம், பாடல் பெற்ற தலச் சிறப்புக்கள். (6 + 7 + 7 = 20 புள்ளிகள்)

## பகுதி - II

04) அ) உயர் அறிவு இயற்கை உலகு என்பன எவ்வாறு தொழிற்படுகின்றன. எதற்காக இயற்கையும் உலகும் படைக்கப்பட்டன என்பவற்றை ஆய்வு செய்யும் தத்துவமாக சாங்கிய தரிசனம் விளங்குகின்றது.

ஆ) அறிவுடையது, நித்தியமானது, இரக்கமற்றது போக்தா அன்றி கருத்தா அன்று
சாங்கியக் கோட்பாட்டில் புருடன் என்பது போக்தா எனக் கூறப்பட்டுள்ளது. போக்தா என்பது போகங்களை அனுபவிப்பது என்பது பொருள். புருடன் என்னும் போக்தாவிற்கு போகத்தைப் படைக்கும் சக்தியாக பிரகிருதி உள்ளது. அதனால் புருடன் பிரகிருதியால் தளைப்படுத்தப்பட்டுள்ளது என்பர். சாங்கியம் வீடுபேறு பற்றியும் கூறுகிறது. புருடனே வீடு பேறு அடையும் என்பது சாங்கியத்தின் கருத்தாகும்.
பிரகிருதியின் பிடியிலிருந்து விடுதலை அடையும் போது முத்தி கிடைக்கும்.

இ) அறிவற்றது, சடப்பொருள், நித்தியமானது
(அழிவற்றது, என்றுமுள்ளது)
இயக்கமற்றது.
மூலப்பொருள் ஒன்று இன்பதுன்பங்களால் தீண்டப்படாதது. அதுவே பிரகிருதி என சாங்கியம் குறிப்பிடுகின்றது. பிரகிருதியே பிரபஞ்சமாக விரிவடைகின்றது. புருடனுக்காகவே பிரபஞ்சம் விரிவடைந்து தனு, கரண, புவன போகமாக மாற்றமடைகின்றது. பிரகிருதி தாமாகவே விரிவடையும். அதனை செயற்படுத்த ஒருவன் தேவையில்லை. கடவளை மறுத்த சாங்கியம் புரடன் என்னும் ஆன்மாவை மேன்மைப்படுத்துகின்றது. பிரகிருதி புரடனடைய போகத்திற்காக பொருட்களை உற்பத்தியாக்கிய வண்ணம் இருப்பது. (4 + 8 + 8 = 20 புள்ளிகள்)

05) அ) சைவசித்தாந்தம் கூறும் முப்பொருள்களில் ஆன்மாவும் ஒன்று.
சித்தாந்திகள் ஆன்மாவிற்குப் பசு என்ற நாமத்தைச் சுட்டுகின்றனர்.
இது சதசித்து எனக் கூறப்படுகின்றது.
கடவுளைப் போலவே உயிர்களும் அநாதிமான நித்தியப் பொருள்கள்
உயிர்களின் எண்ணிக்கைக்கு அளவே இல்லை. உயிர்கள் அளவில்லாதவை
பசு பாசத்தோடு சம்பந்தப்பட்டு நிற்கும் நிலை பெத்தநிலை
பாசங்கள் யாவும் நீக்கப்பட்டு உயிர் இறைவனைச் சாரும் போதுள்ள நிலை முத்தி எனப்படும்.

மூவகை ஆன்மாக்கம் ஆன்மாவின் இலட்சியம் என்பன விளக்கப்படவேண்டும்.

ஆ) ஆன்மாவை அநாதியாகப் பீடித்துள்ள ஆணவமலம் ஏனைய கன்மம் மாயை ஆகிய மலங்கள் பற்றியும் ஆன்மாவை பீடித்துள்ள மும்மலங்களும் ஆன்மாவை முத்தியடைவதற்கு தடையாக உள்ள மலங்கள் பற்றிய விளக்கம்.

இ) ஆன்மாவிற்கும் இறைவனுக்குமிடையிலான தொடர்பு ஆன்மாவின் இலட்சியமான வீடுபேறை அடைவதற்கு இறைவன் தடத்த நிலையில் ஆற்றும் செயற்பாடுகள் பற்றிய விளக்கம்.

ஈ) ஆன்மா, மலபந்தங்களிலிருந்து விடுபடுவதற்கு சைவசித்தாந்தும் பல வழிகளைக் கூறுகிறது. அவை
சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் நான்கு மார்க்கங்களாகும். நான்கு மார்க்கங்களிலும் நிற்கும் ஆன்மா படிமுறையாக முத்தி நிலையை நோக்கிச் செல்லும். ஆன்மாவானது மலங்களிலிருந்துவிடுபட்டு பக்குவ நிலையை அடையும். ஆன்மாவானது பிறப்பு, இறப்பு என்னும் தொடர்ச்சியிலிருந்து விடுபட்டு இறைவன் திருவடியை அடைந்து இரண்டறக் கலந்து பேரின்பம் பெறுதலே முத்திநிலையாகும். இம்முத்திநிலையைத் தாடலை போற் கூடல் எனத் திருட்பயன் கூறுகிறது. (5 + 5 + 5 + 5 = 20 புள்ளிகள்)

06) இந்து சமுதாயத்தில் அறம், பொருள், இன்பம், வீடு ஆகியவை பெறும் முக்கியத்துவம் விளக்கப்படவேண்டும். அறம் இல்லறம், துறவறம் பற்றிய அறநூல்கள் எடுத்துக்காட்டுகள் மூலம் விளக்க வேண்டும். லௌகீகப் பொருள், மெய்ப்பொருள், சிற்றின்பம் பேரின்பம் வீடு பேறு பற்றிய விளக்கம் எழுதப்பட வேண்டும்.

07) திருக்கோணேஸ்வரம் - பாடல் பெற்றத்திருத்தலம். பஞ்ச ஈச்சரங்களில் ஒன்று நாயன்மார்களால் பாடப்பெற்ற திருத்தலம் மூர்த்தி தலம் தீர்த்த சிறப்புகள் எழுதப்படவேண்டும். கேது வழிபட்ட சிவதலம் மகோற்சவங்கள் பற்றி விளக்க வேண்டும்.

(20 புள்ளிகள்)

08) அக்கினி - வேதகாலத் தெய்வங்களில் ஒன்று. தூய்மையின் சின்னம். மனைத் தெய்வம். தேவதூதன் போன்ற பெயர்களால் அழைக்கப்படும் தெய்வம்.

திருவருட் பயன் - 14 மெய்கண்ட சாஸ்திர நூல்களில் ஒன்று இதன் ஆசிரியர் உமாபதி சிவாச்சாரியார் சித்தாந்த அட்டடகங்களில் ஒன்று இரண்டு அடிகளில் சுருங்கிய வடிவத்தில் சித்தாந்தக் கருத்துக்களை தருவது சோழர் காலத்தில் எழுந்த நூல்

கடையிற் சுவாமிகள் - இந்தியாவில் பெங்களூரில் 19 ஆம் நூற்றாண்டில் வாழ்ந்தவர். பெங்களூரில் நீதிமன்றில் நீதிபதியாகக் கடமையாற்றியவர். ஸ்ரீ நரசிம்ம பாரதியாரின் உத்தம சீடராகக் கருதப்பட்டார். நரசிம்ம பாரதியாரினால் "முத்தியானந்தா" எனும் திட்சா நாமம் கொண்டவர். குழந்தைவேல் சுவாமிகளை உத்தம சீடராகக் கொண்டவர்.

திருமூலர் - கி. பி. 3 ஆம் நூற்றாண்டுக்கும் 6 அம் நூற்றாண்டுக்கும் இடைப்பட்ட காலத்தில் தமிழ் நாட்டில் வாழ்ந்ததாகக் கருதப்படுகின்றது. திருக்கைலாச மரபில் வந்தவர். இம்மரபினைச் சிவ மரபு, நாதன் மரபு என அழைப்பர். திரு நந்தி தேவரிடம் சிவாகமங்களை கற்றுணர்ந்தவர். 10ம் திருமுறையாகிய திருமந்திரத்தை எழுதியவர். சைவசித்தாந்தக் கருத்துக்களை கூறும் நூல் தமிழ் ஆகமம் என்று போற்றப்படுவது.

ஆணவம் - மூல மலம், இருண் மலம் என அழைக்கப்படுவது ஆன்மாவோடு அநாதியாகவே சேர்ந்திருப்பது இருளை விடக் கொடுமையானது எனக் கூறப்படுகின்றது. நெல்லில் உமிபோலவும் செம்பில் களிப்பு போல ஆன்மாவை பற்றியிருப்பது.

தட்சணாமூர்த்தம் - சிவமூர்த்தங்கள் 64 ஆகும். இதில் சிறப்பாக 25 மூர்த்தங்கள் குறப் பிடப்படுகின்றன. தட்சணாமூர்த்தி வடிவ வகை 4. யோகதட்சணாமூர்த்தி, ஞான தட்சணாமூர்த்தி, வியாக்கியான தட்சணாமூர்த்தி, வீணாதர தட்சணாமூர்த்தி, பிரதி லட்சணம், தத்துவக் கருத்துக்கள் பற்றி விளக்கப்படவேண்டும். (5 x 4 = 20 புள்ளிகள்)